**சார்பு நீதிமன்றம், திருத்துறைப்பூண்டி**

**OS.123/2023**

நாள்.27.06.2025

**வா.சா.1. 1–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி:–**

தாவா சொத்து நாளது தேதி வரை காலி மனையாக உள்ளது. தாவா சொத்து என்னுடைய அனுபவத்தில் உள்ளது என்பதற்கு ஆதரமாக ஏதேனும் ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. தாவா சொத்திற்கு அருகாமையில் வணிக வளாகம் ஒன்று கட்டப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தை என்னிடம் விற்பனை செய்த விவரத்தை ஒரு பொது அதிகார முகவராக என் மனைவி பிரதிவாதிக்கு தெரிவித்தாரா என்றால் தெரிவித்துள்ளார். அதற்கு ஆதாரமாக ஆவணங்கள் ஏதேனும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. ஒரு பொது அதிகார முகவரை இவ்வழக்கில் அவசிய தரப்பினராக நான் சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. 30.10.2020 அன்று நான் பிரதிவாதிக்கு அனுப்பிய வழக்கறிஞர் அறிவிப்பிற்கு 05.11.2020 தேதியிட்டு பிரதிவாதி பதில் அறிவிப்பு அனுப்பிய விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். அந்த பதில் அறிவிப்பை நான் இந்த வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அதற்கு என்ன காரணம் என்று எனக்கு தெரியாது. ஒரு பொது அதிகார முகவராக ஒரு சொத்தினை விற்பனை செய்யும்போது விற்பனை செய்த தொகை மற்றும் வரவு செலவுகளை உரிமையாளரிடம் ஒப்படைக்க வேண்டும் என்றால் சரிதான். வரவு செலவுகள், கிரயத்தொகை பிரதிவாதியிடம் பொது அதிகார முகவர் ஒப்படைத்து விட்டார். அதற்கான நான் ஆதாரத்தை நான் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் கிரயத்தொகையை என்னுடைய வங்கி காசோலை மூலம் பிரதிவாதியிடம் கொடுத்து விட்டேன். அதற்கான ஆதாரத்தை தாக்கல் செய்துள்ளேனா என்றால் வங்கி கணக்கு முடிக்கப்பட்டு விட்டதால் தாக்கல் செய்யவில்லை. பழைய புல எண்.214/2 நாளது தேதி வரை பிரதிவாதியின் பெயரில் உள்ளது என்றால் சரிதான். நான் சொல்வது போல் எனது பொது அதிகார முகவர்

எனக்கு செய்து கொடுத்த கிரய ஆவண கிரயத்தொகையையோ, வரவு செலவு கணக்குகளையோ பிரதிவாதியிடம் ஒப்படைக்கவில்லை என்றால் சரியல்ல. பொது அதிகார பத்திரம் தற்போது வரை என்னிடம் தான் உள்ளது என்றால் நீதிமன்றத்தில் ஆவணமாக தாக்கல் செய்துள்ளேன். நான் கிரயப்பதிவு செய்யும்போது இந்த பொது அதிகார பத்திரத்தை 2–ம் பிரதிவாதியின் அலுவலகத்தில் தாக்கல் செய்த ஆவணத்தோடு சேர்த்து தாக்கல் செய்தேனா என்றால் சரிதான். நான் பதிவு செய்த கிரய ஆவணமான வா.சா.ஆ.1–ல் நான் பொது அதிகார பத்திரத்தையோ, புல எண்.214/2 சம்பந்தபட்ட வருவாய் துறை ஆவணங்களையோ தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் பதிவு செய்த காலத்தில் சார்பதிவாளர் அலுவலகத்தில் கேட்கவில்லை. பிரதிவாதி பொது அதிகார முகவர் பழைய புல எண். 214/2, புதிய புல எண். 214/2ஏ சொத்துக்கு கொடுத்த பொது அதிகாரத்தின் படி நடந்து கொள்ளவில்லை என்றால் பிரதிவாதி பொது அதிகாரத்தை ரத்து செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. பொது அதிகார முகவர் அவருடைய சுயலாபத்திற்காக அதிகார சொத்தினை தவறாக பயன்படுத்தக்கூடாது என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கும், பொது அதிகாரம் கொடுக்கப்பட்ட சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. தமிழ்நாடு நீதிமன்ற முத்திரைத்தாள் சட்டம் பிரிவு 50 மற்றும் 53–ன் கீழ் மதிப்பீடு மற்றும் முத்திரைக்கட்டணம் செலுத்தியது தவறு என்றால் சரியல்ல. பழைய புல எண். 214/2, புதிய புல எண். 214/2ஏ சொத்து நாளது தேதி பிரதிவாதியின் அனுபவத்தில் தான் உள்ளது என்றாலும், உண்மையிலேயே மேற்படி சொத்தை நான் வாங்கியிருந்தால் உடைமை சுவாதீனம் மற்றும் செயலுறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்திருக்க வேண்டும் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் சட்டப்படி செல்லத்தக்க ஆவணம் அல்ல என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் பழைய புல எண். 214/2, புதிய புல எண். 214/2ஏ சொத்தின் மீது பிரதிவாதிக்கு உள்ள உரிமையை எவ்விதத்திலும் கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள பரிகாரம் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றாலும், தாவா தள்ளுபடி செய்ய

வேண்டியது என்றாலும் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் தாவா சொத்திற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>மறு விசாரணை :– இல்லை</u>**

Typed down to my dictation, in my Presence and hearing, and under my personal direction and Superintendence and admitted by the witness to be correct.

Subordinate Judge,
Thiruthuraipoondi.